கனம் இராமநாதபுரம் மாவட்ட முதன்மை / அமர்வு நீதிபதி அவர்கள் முன்னாள்

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8364136

1. District : இராமநாதபுரம் PS: ஆர்.எஸ் மங்கலம் Year: 2026 FIR No.: 05/26 Date: 22.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: வாழ்வி நம்பிக்கை திருத்தச் சட்டம் Sections பிரிவுகள்: 7(a) of PC Amendment Act 2018
(ii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 19.06.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 17.30 மணி Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 22.06.2026 Time : 15.15 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) தொகுதி-I Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 40 கி.மீ மேற்கில்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சார்பதிவாளர் அலுவலகம்
Beat Number : (b) Address : பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. மோகன்குமார் (b) Father's/ Husband's Name : பொன்னையா
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 40/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ஆவணஎழுத்தர் (g) Address : திருமண ஆவணம் எழுதும் அலுவலகம்
தொழில் முகவரி எண் 18, நகராட்சி காம்பளக்ஸ்,
N.R. மஹால் அருகில், பரமக்குடி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. மகாலெட்சுமி, உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம்,
பரமக்குடி, இராமநாதபுரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– தாமதம் ஏது மில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-

சமர்ப்பிக்கிறேன் : N.ராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 22.06.2026 ஆம் தேதி 15.15 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி P.மோகன்குமார் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சார் பதிவகத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி.மகாலெட்சுமி ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும், புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.05/2026 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 22.06.2026 ஆம் தேதி காலை 15.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P.மோகன் குமார், LLB, வயது 40/2026, த/பெ பொன்னையா, திருப்பதி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

22.06.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

22.6.26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

22.06.2026 – 16.00 மணி

Name: பெயர் N.ராஜேஸ்வரி
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
ஊதக மரபு
இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 05/2026 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

ஆவணம் எழுதும் அலுவலகம், எண்.18, நகராட்சி காம்ப்ளக்ஸ், NR மஹால் அருகில், பரமக்குடி. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம். ஐயா, நான் பரமக்குடி காந்திஜி ரோட்டில் சார் பதிவாளர் அலுவலகம் அருகே திருப்பதி என்ற பெயரில் சுமார் மூன்று வருடங்களாக பத்திரம் எழுதும் அலுவலகம் நடத்தி வருகிறேன். எனது மாமனார் நாராயணமூர்த்தி என்பவரின் தந்தைக்கு பூர்வீக சொத்தான பரமக்குடி சுப்பிரமணியன் தெரு வார்டு G, Block 19, TS No.18 என்ற இடத்தில் 1248 சதுர அடி அளவுள்ள இடத்தில் மேற்படி வாரிசுதாரருகளுக்கு பாத்தியமான 405 சதுர அடி இடத்தை மட்டும் எனது மாமனாரின் உடன் பிறந்தவர்கள் வாரிசு அடிப்படையில் மேற்படி சொத்திற்கு விடுதலை பத்திரமானது என்னால் ஆவணம் தயார் செய்யப்பட்டு கடந்த 19.06.2026 ஆம் தேதி பரமக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 3034/2026 பிரகாரம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி ஆவணத்தை பதிவு செய்த போது மேற்படி அலுவலகத்தில் வைத்து சுமார் 17.30 மணிக்கு பரமக்குடி சார் பதிவக உதவியாளர் (பொறுப்பு சார் பதிவாளர்) திருமதி.மகாலெட்சுமி என்பவர் ரூ.30,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் எனக் கேட்டார். நான் அச்சமயம் எனது மாமனார் மிகவும் கஷ்டபடுவதாகவும் அவரிடம் கேட்டு தகவல் சொல்வதாக வந்துவிட்டேன். பின்னர் இன்று 22.06.2026 காலை சுமார் 11.30 மணியளவில் பரமக்குடி சார் பதிவகத்திற்கு மேற்படி பத்திரத்திற்கு களப்பணி முடித்து தரக்கோரியும், அவர் கேட்ட லஞ்ச பணத்தை தர முடியாது என்றும் தகவல் சொல்ல நான் சென்றபோது உதவியாளர் இருக்கையில் இருந்த உதவியாளர் திருமதி.மகாலெட்சுமி என்னிடம் வெள்ளிக்கிழமை (19.06.2026) நான் பதிந்த விடுதலை பத்திரத்திற்கு கள ஆய்வு செய்து பத்திரத்தை விடுவிக்க நான் கேட்ட பணம் ரூ.30,000/-த்தை கொடுக்குமாறு கேட்டார். அப்போது நான் எனது மாமனாரின் இயலாமையை எடுத்துக் கூறியதற்கு அவர் வேலை முடிந்தவுடன் இப்படி பேசக்கூடாது என்றும், சரி உங்களுக்காக ரூ.3000/- குறைத்து ரூ.27,000/-த்தை இன்று 22.06.2026 சாயங்காலத்துக்குள் என்னிடமோ அல்லது நான் சொல்லும் நபரிடமோ கொடுக்குமாறு கராறாக கூறினார். அதன் பின்பு நான் யோசித்து பார்க்கும் போது

நியாயப்படி செய்ய வேண்டிய அரசு பணியை செய்ததற்கு ரூ.27,000/- லஞ்சமாக கேட்ட பரமக்குடி சார்பதிவக உதவியாளர் திருமதி.மகாலெட்சுமி என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) P.மோகன்குமார். அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 22.06.2026 ஆம் தேதி 15.15 மணிக்கு கொடுத்த புகாரைப்பெற்று வாதி மற்றும் எதிரியின் முன்நடத்தையை விசாரணை செய்து 15.30 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.05/2026 u/s 7 (a) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

22.6.26

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM.